Regisered as a News Paper in Ceylon

விலை: சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரேட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELA NADU
தேசிய தினசரி

அல்கத்தீன் பைப்புகள்
S-LON P.V.C.
பைப்புகள்
கல்வனேஸ்ட் பைப்புகள்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 சித்திரை 10 ஸபர் 26 (23—4—71) வெள்ளிக்கிழமை இதழ் 70

## நாடு கஷ்டமான நிலையில் இருக்கின்றது.

# "கட்சி பேதங்களை மறந்து அமைதிக்கு உழைப்போம்"

## அமைச்சர் குமாரசூரியர் அழைக்கிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இன்றைய நிலையில் கட்சி பேதங்களைமறந்து, அரசியல் விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடடு சகலஇன மக்களும் ஒன்றுபட்டு நாட்டின் முன்னேற்றத்துக்கும் ஒருமைப் பாட்டுக்கும் உழைக்க வேண்டும்."

தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இந்த உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த சபை உறுப்பினர்களின் கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொண்டார். யாழ். நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் இந்தக்கூட்டம் நடந்தது.

தபால் அமைச்சர் திரு. குமாரசூரியர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"நாடு மிகவும்கஷ்டமான நிலையிலிருக்கிறது. ஒரே வயிற்றில் பிறந்த அண்ணனும் தம்பியும் வெவ்வேறு பக்கமாக நின்றுகொண்டு இரத்தம்சிந்துகிறார்கள் இரு பக்கத்தினரும் இந்நாட்டில் பிறந்த இந்நாட்டுப் பிரஜைகள் இந்த நிலைமாறி, நாடு அமைதியாக வாழ்வதற்கு அரசியல் விவாதம் ஒழிய வேண்டும். அழுக்கான சிந்தனைகள் அகலவேண்டும். தேர்தல்கள் அவ்வப்போது நடக்கும். அவையெல்லாம் அந்த நேரத்துடனேயேமுடிந்து போய்விடவேண்டும். நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் ஆபத்துவரும்வேளையில் நாம் கட்சிபேதங்களை மறந்து ஒன்றுபட்டுஉழைக்க வேண்டும்.

### மக்களுக்கு பாராட்டு

இந்தநாட்டு மக்களைநான் பாராட்டுகின்றேன். அவர்கள் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாலும் எவ்வளவு பிரச்னைகளுக்குள்ளாகியுள்ள போதிலும், மனம் தளராமல் அரசாங்கத்துக்கு தமது மனப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்கிவருகிறார்கள், யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரையில் நான் அவர்களை மிகவும் நன்குணர்ந்தவன். அவர்கள் அரசாங்கத்துக்கு அளித்துவரும் ஒத்துழைப்பை நன்குணர்வேன் தொடர்ந்தும் சகல துறைகளிலும் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். அரசாங்கத்தின் சார்பாக இந்தக் கோரிக்கையை விடவில்லைஎன் சொந்தமுறையில் இந்தக்கோரிக்கையை நேசக்கரம் நீட்டி விடுக்கிறேன்.

மேயர் திரு. துரையப்பாவும், அமைச்சர் குமாரசூரியரும் அருகருகே அமர்ந்திருந்தார்கள். குமாரசூரியருக்கு மறுபக்கத்தில் உறுப்பினர் திரு. விசுவநாதன் இருக்க திரு. துரையப்பாவை ஆதரித்த மற்றைய உறுப்பினர்களும் கமிட்டி அறையில் அமர்ந்தார்கள்.

4-ம் பக்கம் பார்க்க

## இளைஞர் குடியேற்றதிட்டத்தில் பயங்கர ஆயுதங்கள்

### கேகாலையில் 29 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை

கோட்டை, வியாழன்

கேகாலை மாவட்டத்தில் நேற்று இராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்குமிடையே கடுமையான மோதல் ஏற்பட்டதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

இப்பகுதியில் கடமை புரிந்துவந்த இராணுவவீரர்கள் ரம்புக்கண, கல்கமுவ, வரக்காப்பொல ஆகியபகுதிகளில் பயங்கரவாதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் 29 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். பலர்காயமடைந்தனர் இராணுவ வீரர்களுக்கு சிறு காயம் ஏற்பட்டது

இரித்தலை பகுதியிலுள்ள இளைஞர் குடியேற்றப்பகுதி ஒன்றை கடற்படையினர் சுற்றிவளைத்தனர். பயங்கரவாதிகள் கைப்பற்றியிருந்த அரசாங்க பங்களா ஒன்றை கடற்படையினர் மீட்டனர். இப்பகுதியில் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 15 பயங்கரவாதிகள் காயமடைந்தனர் படுகாயமடைந்த பயங்கரவாதி ஒருவரை கடற்படையினர் கைது செய்தனர், இதில் காயமடைந்த பயங்கரவாதிகளின் தலைவனும் மற்றவர்களும் காட்டுக்குள் ஓடிமறைந்துவிட்டனர். காயமடைந்த படைவீரர் ஒருவர் கொழும்புக்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டார்.

இப்பயங்கரவாதிகளிடமிருந்து பெருமளவில் ஆயுதங்கள், இயந்திரத்துப்பாக்கிகள் சீருடைகள், முக்கிய இடங்கள் பற்றிய வரைபடங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

4-ம் பக்கம் பார்க்க

## உணவு, எண்ணை தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடும்

### அமைச்சர் வாக்குறுதி

— பாமா. ராஜகோபால் —

யாழ்ப்பாணம், வெள்ளி

உணவுப் பொருட்கள் மண்ணெண்ணை, பெற்றோல் தட்டுப்பாடு இன்னும் ஒரு சில நாட்களில் முற்றாக நீங்கிவிடுமென்று தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் என்னிடம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

லொறிகள்மூலம் உணவுப் பொருட்கள் பலத்த பாதுகாப்புடன் அனுப்பப்பட்டு வருவதாகவும், போக்குவரத்து சாதாரண நிலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

கொழும்பு — யாழ்ப்பாணம் ரயில்சேவை விரைவில் நடைபெறுமென்றும் அவர் தகவல் வெளியிட்டார்.

தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். அத்தியாவசியஉணவு பாவனைப்பொருட்கள் சம்பந்தமாக நேரில் நிலைமையைத் தெரிந்து [illegible] கைகளை மேற்கொள்[illegible]ாகவே அவர் இங்கு இச் சிலமணிநேர விஜயத்தை மேற்கொண்டார்.

பலாலி விமான நிலையத்துக்கு நேற்றுக்காலை 8-30 மணிக்கு வந்து சேர்ந்த அமைச்சர் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்துக்குச் சென்றார். அங்கு அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் உணவு விநியோகம் சம்பந்தமான மாநாட்டை நடத்தினார். வடபகுதியில் [illegible]

4-ம் பக்கம் பார்க்க

## பெட்ரோல் கட்டுப்பாட்டு விலை மீறப்பட்டால் தண்டனை

கோட்டை, வியா

நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் கூடுதலாக பெற்றோல் விற்பனை செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென பெற்றோலியம் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றுப் பகுதியிலும் பெற்றோலை அதிக விலைக்கு சிலர் விற்று வருவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அப்படி கூடுதலாக விற்பனை செய்பவர் கண்டு பிடிக்கப்பட்டால் கடுமையாக தண்டிக்கப்படுவர் என்றும் அவ்வறிக்கை தெரிவித்தது.

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை 6-30 மணி முதல் நாளை காலை 5-30 மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

# எதிரிக்கு நன்னடத்தை பிணையும் அபராதமும்

யாழ்ப்பாணம், வியாழன் கெற்பேலி கொலைமுயற்சி வழக்கில் எதிரிக்கு 2 வருடம் 1000 ரூபா நன்னடத்தைப் பிணையும் 500 ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை நடுவில் எதிரி கடுங்காயம் விளைவிக்க முயற்சித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

அபராதப்பணமான 500 ரூபாவில் 450 ரூபாவைக் காயமடைந்தவருக்குக் கொடுக்க வேண்டுமென்றும் 50 ரூபா கோர்ட்டுச் செலவிற்கென்றும் நீதியரசர் தீர்ப்பில் தெரிவித்தார். மே மாதம் 19-ம் திகதிக்கு முன் அபராதப்பணம் செலுத்தத் தவறினல், நன்னடத்தைப் பிணை ரத்துச்செய்யப்பட்டு எதிரிக்குத் தண்டனை விதிக்கப்படுமென்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கில் கெற்பேலியில் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி ஆசைப்பிள்ளை பாலசிங்கம் என்பவரை சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாக செல்லையா கந்தசாமி என்பவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை புறக்டர் எஸ். கே. திரவிய நாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானர், எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் வி. யோகேஸ்வரன் நியமிக்கப்பட்டிருந்தார்.


நாகம்ஸ் சினிமா
சுன்னுகம்
காலை 10-30, பி.ப 2-00
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
கலங்கரை விளக்கம்

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00
பி ப. 1-30 மணி
ரஞ்சன் — அசோகன்
நடித்த
கப்டன் ரஞ்சன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
தினசரி பி. ப. 1-30
சிவாஜி-சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்


# தமிழ்நாட்டில் ராஜ்ய சீர்திருத்த கமிட்டி நியமனம்

சென்னை, ஏப். 22

தமிழ்நாட்டில் 3 உறுப்பினர்களைக் கொண்ட ராஜ்ய சீர்திருத்தக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. திரு. ஏ. சிவானந்தம், தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் திரு ஏ. ஆர். சுப்பையா ஆகியோர் இக்கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்கமிட்டி ஆராயவிருக்கும் ஆராய்வு வரம்புகள் பற்றிய முடிவுபின் தெரிவிக்கப்படுமென தமிழ்நாடு முதலமைச்சர் திருமு.கருணநிதி தெரிவித்தார்.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி10-00, 1-30மட்டும்
நாகேஷ் - கே. ஆர். விஜயா
நடித்த
சர்வர் சுந்தரம்

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10 30 பி ப 1-30
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
தங்கத்தம்பி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - K. R. விஜயா
நடித்த
தங்கை

## விற்பனைக்கு

விற்பனைக்கு'
ரேப்ரெக்கோடர் AKAL-1710W 2 மைக்குகளுடன் தொடர்பு கொள்ளவும். சாந்தாராமன், 59, கன்னாட்டி வீதி, யாழ்ப்பாணம். 2767

ஆயர்பாடி சோதிடர் தரும் இரசிப்பலன் வெளிவந்துவிட்டன. உங்களின் அரிய துணைவன். இன்றே உங்களின் இராசிக்குரிய புத்தகம் ஒன்று ரூபா 1-20 கொடுத்து வாங்குங்கள் இதில் உங்களுக்குவேண்டிய சகல நன்மைகளும் வழிவகைகளும் தந்துள்ளனர். வே. த. மயில்வாகனம், ஆயர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 2763


அரசின் நடவடிக்கையை

# அமைச்சர்களும் எம். பி. க்களும் எடுத்துக் கூறுவர்

கோட்டை, வியா

அமைச்சர்களும் ஆட்சிமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதிகளின் மக்களுக்கு அரசாங்கம் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவதற்காக தொகுதிகளின்சகல பகுதிகளுக்கும் விஜயம் செய்கின்றனர் என அரசாங்க வட்டாரத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

காணி, விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவாவும் மற்றும் கண்டிப் பகுதியிலுள்ள ஆட்சிமன்ற அங்கத்தவர்களும் தங்கள் தொகுதிகளின் மக்களுக்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எடுத்துக்கூறியுள்ளதாகவும் மேலும் அப்பிரமுகர் தெரிவித்துள்ளார்.


## கல்வி

கல்வி
சகல லண்டன் கணக்கியல் பரீட்சைகளுக்கும் புதிய வகுப்புகள், 3 சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் 5-5-1971-ல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு: அதிபர், ஸ்ரீ மீனட்சி வர்த்தகக் கல்லூரி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2768

கல்வி:
1971 ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் க. பொ. த. (சாதாரண/உயர்தர) பரீட்சைகளுக்கு வர்த்தக வகுப்புகளும், 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் இன்ஸ்ரிரியூட் ஒவ் புக்கீப்பேஸ், லண்டன் Institute of Book Keepers, London (Diploma & Professional) பரீட்சைக்கு புதிய வகுப்புகளும் 5-5-1971-ல் ஆரம்பமாகின்றன. ஸ்ரீ மீனட்சி வர்த்தகக் கல்லூரி, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2770

கல்வி
1972-ம் ஆண்டு மேமாதம் நடைபெறும் லண்டன் சேம்பர் ஆப் கொமர்ஸ் பரீட்சைக்கு ஆங்கிலம், சிங்களம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய பாடங்களுக்கு புதிய வகுப்புகள் 5-5-1971ல் ஆரம்பமாகின்றன ஸ்ரீ மீனட்சி வர்த்தகக் கல்லூரி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2769


தாவடி, புதன்

கட்டைப்பராய் கலைமணி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவைக்கொண்டாடுவதென்றும் இம்மாதம் 22-ம் திகதி நடத்துவதாயிருந்த விளையாட்டுப்போட்டிகளை விழாவை யொட்டி நடத்துவதென்றும் பிரஸ்தாப சச நிலையத்தினர் கூடித் தீர்மானித்தனர்.


ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.1-30
சிவாஜி கணேஷன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி
காலை 10-15
பி. ப 2-00
மாஸ்ரர் பிரபாகர்
பேபி சுமதி - லெட்சுமி
நடித்த
வா ராஜா வா

5.வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி.ப.1-30
எம். ஜி. ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னு
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனேகா, அசோகன், ஆனந்தன்
நாகேஷ்; சுந்தரராஜன்
நடித்த
ஜயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(மர்மச்சித்திரம்)

மிளகாய் செய்கையில்
குருமன் நோய், கனி உறை துளைப் புழு ஆகிய பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்தி அதிக விளைச்சலைப் பெற பாவியுங்கள்



★
பொலித்தியோன் 100°/.
(பெனிற்ரோதயோன்)
1 அவுன்ஸ் 6 கலன் நீரில்
★
அல்லது
பொலித்தியோன் 50°/.
(பெனிற்ரோதயோன்)
1 அவுன்ஸ் 2-3 கலன் நீரில்
★
அல்லது
மெற்றசிஸ்டொக்ஸ் "ஆர்"
1 அவுன்ஸ் 6 கலன் நீரில்
உடன்
பேயர் கெந்தகம் 80°/.
1 அவுன்ஸ் 2 கலன் நீரில்
கலந்து தெளிக்கவும்.
★

BAYER

பொலிடோல், பரத்தயன், பேருசில் மட்டாசில், டிப்ரறெக்ஸ், குசதயன், லெபேசிட் ஆகிய கிருமி நாசினிகளும் பாவிக்கலாம்.

[illegible]கெம் லிமிட்டெட், 400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10. த. பெ. 70. தொ. பே. 93563, 96331-6.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2½ லட்சம் கிழக்கு வங்க அகதிகள் இந்தியா வந்தனர்

புதுடில்லி, ஏப். 22

கிழக்கு வங்காளத்தில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதை அடுத்து இதுவரை 2 லட்சத்து 58 ஆயிரம் பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ளனர் என இந்திய வானொலி தெரிவித்தது.

இவர்களில் 90 ஆயிரம் பேர் முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, வைத்தியம் போன்ற உதவிகளை அரசு செய்து வருவதாகவும் மிகுதிப் பேர் இந்தியாவில் தங்கள் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் தங்கி இருப்பதாக இந்திய மறுவாழ்வு அமைச்சர் காஸ்கார் புதுடில்லியில் தெரிவித்தார்.

டாக்காவில் இருக்கும் இந்திய உதவித் தூதரகத்திலுள்ள சில அதிகாரிகளையும் குடும்பத்தினரையும் இந்தியாவிற்கு கொண்டு வருவதற்காக காட்மாண்டிலிருந்து டாக்காவிற்கு விமானம் ஒன்றை இந்தியா அனுப்பி வைப்பதற்கு பாகிஸ்தானிடம் அனுமதி கோரியதற்கு இதுவரையும் அனுமதி கிடைக்கவில்லை. கிழக்கு வங்காளத்தில் இந்தியத் தூதுவ அதிகாரிகளும் குடும்பத்தினரும் சுதந்திரமாக நடமாட முடியாமையினாலேயே இந்த நடவடிக்கையை இந்தியா எடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கப்பல் திரும்பியது

பெருந்தொகை உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கிழக்கு வங்காளத்திற்குச் சென்ற 7 அமெரிக்கக் கப்பல்கள் சிட்டகாங் துறை முகத்தில் பொருட்களை இறக்குவதற்குவேண்டிய வசதிகள் இல்லாமையால் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஜேர்மனியில் கண்டனம்

இனப் பாரபட்சக் கமிட்டிக்கு தனது அறிக்கையை பாகிஸ்தான் சமர்ப்பிக்காமையே கிழக்கு வங்காளத்தில் அது செய்யும் இனப் படுகொலையை நிரூபிப்பதாக இருக்கிறதென இனப் பாரபட்சக் கமிட்டி முன் மேற்கு ஜெர்மனி பிரதிநிதி கண்டனம் தெரிவித்தார். கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தானியர் செய்யும் இனக்கொடுமைகளை வெளிப்படுத்தியமைக்காக அப்பிரதிநிதி இந்தியாவுக்குப் பாராட்டுத் தெரிவித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

மேற்கு ஜெர்மனியப் பத்திரிகைகளும், ரெலிவிஷன்களும் கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் இனக்கொலை ராணுவ அட்டூழியங்கள் பற்றிய புகைப் படங்களை வெளியிட்டுள்ளன.

### பிரிட்டிஷ் எம். பி.க்கள்

பிரிட்டிஷ் ஆட்சிமன்ற உறுப்பினர்களான ரேசன் சவ், மான் ஆகிய இருவரும் கிழக்கு வங்காள மக்களின் நிலைமைகளை நேரில் அறியும் பொருட்டு கிழக்கு வங்காளத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள். இவர்கள் தற்பொழுது புதுடில்லிவந்து சேர்ந்துள்ளனர்.

### ஜாகர்த்தாவில் ஆர்ப்பாட்டம்

இந்தோனேஷியாவின் தலைநகரான ஜாகார்த்தாவில் கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தானியர் நடத்தும் ராணுவ வன்முறைகளைக் கண்டித்து இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்கள் கிழக்கு வங்காளத்திலிருந்து தாயகம் திரும்பியவர்கள் நிகழ்ச்சிகளை நேரில் கண்டவர்கள் என இந்திய வானொலி அறிவித்தது.

---

## லதாமங்கேஷ்கர் ஆஸ்தான வித்வான்

திருப்பதி, ஏப் 22

திருப்பதி வெங்கடேஸ்வர தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்வானாக பிரபல பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் நியமனம் செய்யப்படவிருக்கிறார். இத்தகவலை ஆந்திர மாநில முதலமைச்சர் பிரமானந்த ரெட்டி தெரிவித்தார்.

## 29 மூடை சீனி பிடிபட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகரொருவரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 29 மூடை சீனி கண்டுபிடிக்கப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. வ. முதலித்தம்பியினுல் கைப்பற்றப்பட்ட 29 மூடை சீனியும் அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

......

தாவடி, புதன்

"தாவடிச் சந்தியில் இருந்து சுதுமலை அம்மன் மலை வீதிவரையுள்ள தாவடி மானிப்பாய் வீதி சீர்கேடான நிலையில் இருக்கிறது

---

இஸ்ரேல் விலகிஞல்

# அரபு-சோவியத் படைகள் அங்கு வரக் கூடாது

## இஸ்ரேல் துணை முதல்வர் சொல்கிறார்

நியூயோர்க், ஏப் 22

சூயஸ்கால்வாய் திறக்கப்படும் பட்சத்தில் அதன் கிழக்கரையிலிருந்து இஸ்ரேல் விலகிக்கொண்டால் அங்கு ஆயுதப்படையோ அல்லது சோவியத் படையோ நிலைகொள்ளக்கூடாதென்று இஸ்ரேல் துணைப்பிரதம மந்திரி திரு. ஆலோன் கூறியிருக்கிறார்.

சூயஸ்கால்வாயைக் கப்பல் போக்குவரத்துக்குத் திறந்து விடுவது சம்பந்தமாக சில நாட்களுக்கு முன் எகிப்திய அதிபர் திரு. அன்வர் சதாத் தெரிவித்திருந்த யோசனை பற்றி அமெரிக்க அதிகாரிகளுடன் ஆலோசிப்பதற்காக திரு. ஆலோன் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கிறார். அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு வில்லியம் ரோஜர்ஸை சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தை பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

சூயஸ்கால்வாய் திறந்து விடப்படுவதற்கு மூன்று அடிப்படை யோசனைகளை திரு ஆலோன் வெளியிட்டுள்ளார். சண்டை கெடுபிடிகளை எகிப்து முதலில் கைவிடவேண்டும் கால்வாயின் கிழக்குக்கரையிலிருந்து இஸ்ரேல் விலகிய பின்னர் அங்கு அரபு அல்லது சோவிய படை எதுவும் நிலைபெறக்கூடாது நிரந்தர அமைதிக்கென முழு அளவில் பேச்சுகள் ஆரம்பமாகவேண்டும் என்று திரு ஆலோன் கூறினர்.

இஸ்ரேலுக்கு 12 பென்டம் ஜெட்விமானங்களை அமெரிக்கா கொடுத்துதவ முடிவு செய்திருப்பதாக இங்கு செய்தி வெளியாகியுள்ளது. இச் செய்தியை ராஜாங்க அமைச்சின் அதிகாரி ஒருவர் மறுக்கவுமில்லை, ஆமோதிக்கவுமில்லை.

---

## பாப்பரசரை கொலை செய்ய முயன்றவருக்கு 28 மாதம் சிறை

மணிலா, ஏப். 22

புனித பாப்பரசர் சின்னப்பரை கொலைசெய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மெண்டர்ஸோ குற்றவாளியாகக் காணப்பட்டு 28 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆசிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட பாப்பரசர் மணிலா விமான நிலையத்தில் இறங்கிய போது பாதிரி போர்வை அணிந்திருந்த மெண்டர்ஸோ பாப்பரசரை நோக்கிப்பாய்ந்து கத்தியால் குத்தமுயன்ருர் ஆனல் அவர் முயற்சி தோற்கடிக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ் நீதிமன்றத்தில் கடந்த மூன்று மாத காலமாக விசாரணை செய்து வந்த இவ்வழக்கின் தீர்ப்பு இப்போது வழங்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பை எதிர்த்து மேல் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யப்போவதாக மெண்டோஸாவின் வழக்கறிஞர் கூறியதை அடுத்து பணப்பிணையில் அனுமதிக்கப்பட்டார். ஆனல் அவர் பணம் செலுத்தமறுத்து விட்டார்.

---

## அகிம்சை மூலமே சமூக மாற்றம் ஏற்படவேண்டும்

கோண்டை, புதன்

'சமூக மாற்றத்தை அகிம்சை மூலமே கொண்டுவர வேண்டும். அகிம்சையே அதற்குச் சரியான வழியென்பதை இளைஞர்களுக்கு இவ்வேளையில் வலியுறுத்தவேண்டும்.'

சர்வோதய சிரமதான இயக்கத்தின் அங்கத்தவர்களுக்கு இவ்வியக்கத்தின் நிர்வாக செயலாளர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன மேற்கண்டவாறு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம் 17-ம் திகதியில் இருந்து 25-ம் திகதி வரை கொண்டாடப்படவிருந்த அகிம்சை வாரமும் அடுத்த இரு மாதங்களில் மேற்கொள்ளப்படவிருந்த சிரமதான வேலைகளும் பின்போடப்பட்டுள்ளன.

திரு. ஆரியரத்ன மேலும் தமது இயக்க அங்கத்தவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் கூறியதாவது: 'பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் பயங்கரவாதிகளின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களைத் திரும்பவும் அமைதியான மகிழ்ச்சியான வாழ்வு வாழவும் நீங்கள் அரசாங்கத்தோடு சேர்ந்து உதவி செய்யவேண்டும்.

---



# களைப்பா?

வாழ்க்கையில் சிரத்தையிழந்து விட்டீர்களா? அன்றேல் உள்ளூரமற்று, அன்றாட வீட்டுவேலைகளில் வெறுப்பா? டியுரோல் அருந்துங்கள். விட்டமின் பீ, கொம்பிளக்ஸ்ம், இரும்புச்சத்தும் உட்கொண்ட அருமையான செரிப்பழ ருசியுடைய டியுரோல் தன் உள்ளடங்கிய முழுமையான உணவுப் பலத்தால் சக்தி அதிகரிக்கச் செய்து உங்களுக்கு புதுப்பலமளிக்கும்; வாழ்க்கையில் சிறப்புத்தோன்றும்: டியுரோல் இரத்த புஷ்டியை ஊக்குவிக்கவும், உணவில் மெய் விருப்பு உண்டுபண்ணவும், தளர்ந்த நரம்புகளுக்கு மறுமலர்ச்சியளிக்கவுமென விசேஷமாக மருத்துவ ரீதியில் தயாரான டானிக். சோர்விலிருந்து உங்களைத் தட்டியெழுப்பி புத்துயிர் அளிக்க வல்லது. ஒரு டியூமெக்ஸ் தயாரிப்பு.




டியூரோல் அருந்தி புத்துயிர் பெறுக!

GRANT 45 33 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நாடு உனக்கு என்னசெய்கிறது என்றுகேட்காதே.
நாட்டிற்கு நீ என்ன செய்கிறாய் என்று கேள்.
—ஜோன்கென்னடி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம்
10 - ந் திகதி ( 23 - 4 - 71)

# மேயர்பதவி நிலைக்கட்டும்!

ஒருவர் இறக்கப்பட்டு மற்றொருவர் ஏற்றப்பட்டிருக்கிறார். யாழ்ப்பாண மேயர் பதவி பற்றித்தான் குறிப்பிடுகிறோம். யாழ்ப்பாண மாநகரசபையின் சரித்திரத்தில் மேயர்கள் ஏற்றி இறக்கப்படுவது புதிய விஷயமல்ல; ஆச்சரியமளிக்கும் நிகழ்ச்சியுமல்ல. இந்த மேயராவது சபையின் பதவிக்காலம் முடிவடையும்வரை பதவியிலிருக்கவேண்டுமென்பதே நமது விருப்பமாகும்.

யாழ். மாநகரசபையின் சரித்திரத்திலேயே உறுப்பினர் பதவி வகிக்கும் முதலாவது பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ள திருமதி அந்தோனியா சுவாமிநாதர் யாழ்ப்பாணத்தின் ஏன், இலங்கையின் முதற்பெண் மேயர் என்ற பெயரையும் தட்டிக்கொள்ளக் கூடிய வாய்ப்பு நழுவிப்போனது அவருக்கு மட்டுமல்ல யாழ்ப்பாண நகருக்குமே துர்ப்பாக்கியந்தான். ஆனாலும் ஆற்றலும் அனுபவமும் நிறைந்த ஒருவர், நகரின் தேவைகள் அதிகரித்துள்ள இச்சமயத்தில் மேயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது பலருக்கும் மகிழ்ச்சியும் ஆறுதலுமளிக்கும்.

திரு. துரையப்பா மேயர் பதவிக்குப் புதியவரல்லர். இதற்கு முன்னரும் இருதடவைகள் இப்பதவியை வகித்து 'கெட்டிக்கார மேயர்' என்ற பெயரைத் தட்டிக்கொண்டவர்.

யாழ். நகரில் நவீன சந்தை அமைக்கும் வேலை இன்னும் முடிவடையவில்லை, நீண்டகாலத் தேவை இழுபறிப்பட்டு ஏதோ ஒருவகையாகத் தொடங்கப்பட்டும் இன்னும் முற்றாக முடிவடையாத நிலையிலேயே இருக்கிறது. நகரின் பஸ்நிலையமும் பிரயாணிகள் குறைகளைத் தீர்ப்பதற்குப் போதிய வசதிகளை இன்னும்கொண்டிருக்கவில்லை; நான்நிலைக் கட்டிடம் திட்டமிட்டபடி முற்றாக முடிவடையாததுடன் அதன் தேவைகளும் நிறைவேற்றப்படுவதாகக் காணோம். வீதிகளின் சீர்கேடு பற்றிச் சொல்ல வேண்டியதில்லை; சாக்கடைத்திட்டம் யோசனையாகவே இருக்கிறது. புதிய புதிய கட்டிடங்கள் எவ்வித திட்டமும் இல்லாமல் நாளுக்கு நாள் வீதிகளில் தலைநீட்டுகின்றன. நகரின் சுகாதார வசதிகள் பற்றியும் திருப்திப்படுவதற்கிடமில்லை; குடிதண்ணீர் விநியோகம், மின்சார விநியோகத்திலும் குறைகளிருக்கின்றன.

இக்குறைகளை நிவர்த்தி செய்யவும் நகர மக்களின் தேவைகளை நிறைவேற்றவும் இதற்கு முன்னர் பதவிக்கு வந்தவர்கள் முயற்சி செய்யவில்லையென்று கூறிவிடமுடியாது. ஆனாலும் அவர்களுக்குப் போதிய நிதிவசதிகள் கிடைக்காமல் போனதற்கும் பதவியிலிருக்கும்பொருட்டு அங்கத்தவர்கள் சிலருடைய ஆதரவைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மாநகர சபை அதிகாரிகள் மேற்கொள்ளும் நிர்வாகக் கடமைகளில் தலையிட வேண்டி நேரிட்டதும், அங்கத்தவர்களின் ஆதரவை நிலைநாட்டுவதற்காக அவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கேற்பப் பணிபுரியவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக நேரிட்டதும் அவர்கள் தமது கடமையைச் செவ்வனே செய்யமுடியாததற்கு முக்கிய காரணங்களாக அமைந்தனவென்று சொல்லலாம். இதேசமயம் மேயர்பதவிக்கு ஒருவர் ஏற்றப்பட்டதும்முன்னர் பதவி வகித்தவர் மீதும் அவருக்கு ஆதரவாகவிருந்தவர்கள் மீதும் எப்படிப் பழிவாங்கலாம் என்ற சிந்தனையும், அதற்கான தூண்டுகோலும், மேயரை ஏற்றிய உடனே எப்படி அவரை இறக்கலாம் என்பது பற்றி மற்றும் சிலர் சிந்தித்து முயற்சிசெய்வதும் நகரின் முன்னேற்றத்துக்கு உருப்படியான காரியம் எதுவும் செய்ய எவராலும் முடியாது போய்விடுகிறது.

இவற்றையெல்லாம் அனுபவத்தில் நன்கு உணர்ந்து தெளிந்துகொண்டுள்ள திரு. துரையப்பா "பழிவாங்கும் மனப்பான்மை" தம்மிடம் இல்லையென்பதை முதல் கூட்டத்திலேயே பகிரங்கமாகத் தெரிவித்திருப்பது எவருக்கும் அஞ்சாமல் நகருக்கும் மக்களுக்கும் முன்னேற்றமான நல்ல விஷயங்களைச் செய்துமுடிப்பார் என்ற நம்பிக்கையைத் தருவதாக இருக்கிறது.

நமது நாட்டில் உள்ளூராட்சி அரசியல் சிறந்த முறையில் இயங்கவேண்டுமென்பதற்காக காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா பல முயற்சிகள் செய்தார். அவர் பல சட்டங்களையும் கொண்டுவந்து நிறைவேற்றினார். ஆனால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மட்டுமல்ல மற்றும் முக்கிய பல நகரங்களிலும் மேயர்களை ஏற்றி இறக்கும் பணியில் சிலர் ஈடுபட்டு உள்ளூராட்சிச் சேவைமீது மக்களுக்குள்ள நம்பிக்கையைச் சிதைக்கவே முயன்றிருக்கின்றனர்.

என்றாலும் நம்பிக்கையை முற்றாக இழந்துவிடும் நிலை இன்னும் வந்துவிடவில்லை. திரு. துரையப்பா யாழ். மாநகரசபையின் இப்போதைய பதவிக்காலம் முடிவடையும் வரையாவது மேயர் பதவியிலிருந்து வழிகாட்டுவதற்கு யாழ். மாநகரசபை உறுப்பினர் உறுதுணையாக இருப்பார்களாக!

## இளைஞர் குடியே..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களிடமிருந்து 24 ஸ்ரீ 4885 இலக்கமுடையலொறி ஒன்றும், 5ஸ்ரீ3201, 5ஸ்ரீ 2708 ஆகிய இலக்கத்தையுடைய இரு ஜீப்வண்டிகள் 5ஸ்ரீ1984 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்பயங்கரவாதிகள் வைத்திருந்த மாமூடைகள் ரின்மீன்கள் ஆகியவற்றையும் கடற்படையினர் கைப்பற்றினர். இப்பொருட்களை கடற்படையினர் இப்பகுதி கிராமமக்களுக்கு இலவசமாக விநியோகித்தனர்.

இப்பகுதி வழிஒன்றிலின் சாரத்தினுள் இயக்கும் வெடிகுண்டொன்று இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டது.

பயங்கரவாதிகளைத் தேடும் முயற்சியில் காவற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர்களின் நடமாட்டம் துரிதமாகக் குறைந்து வருகின்றதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளை தேடும் முயற்சிக்கு பொதுத்தாபனங்கள் ஆதரவு தருகின்றன, தென்பகுதியிலுள்ள பயங்கரவாதிகளின் நடவடிக்கைக்குள்ளான எல்பிட்டிப் பகுதியிலிருந்து பயங்கரவாதிகள் மறைந்து குன்றுப் பிரதேசங்களுக்குச் சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மாவரெல்ல மொறக்கடை போன்ற பகுதியில் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## கட்சிபேதங்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது திரு. துரையப்பாவை மேயர் தெரிவில் எதிர்த்துப் போட்டியிட்ட திருமதி அந்தோனியா சுவாமிநாதர் கூட்டம் நடந்த அறைக்குள் நுழைந்தபோது, "அக்கா வாங்கோ அக்கா வாங்கோ" என்று மேயர் எழுந்து நின்று வரவேற்றார். அமைச்சரும் உடனே எழுந்து நின்று வரவேற்றார். அமைச்சருக்கு மேயர் திருமதி சுவாமிநாதரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

எதிர் கோஷ்டியைச் சேர்ந்த திரு. ரி. ஜே. ராஜரத்தினமும் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

உறுப்பினர்கள் தமது வட்டாரப் பிரச்சனைகள் குறித்தும், யாழ் நகர மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் அமைச்சரிடம் சில வேண்டுகோள்களை விடுத்தார்கள். அவைகள் குறித்து தாம் நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், உறுப்பினர்களை நோக்கி பின்வருமாறு பேசினார்:-

'யாழ் மாநகரத்தின் பிதாக்கள் நீங்கள், உங்கள் கையிலேயே நிர்வாகம் இருக்கிறது. உங்கள் பிரச்னைகளை நீங்கள் கவனித்து நிறைவேற்றுவதில் எந்தவித முட்டுக்கட்டையும் இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. கட்சிபேதம் மறந்து நகர முன்னேற்றத்துக்கு உறுப்பினர்கள் இணைந்து உழையுங்கள்'

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல்

**பதுக்கல் வேட்டையில் இராணுவம்**

# சீனி, மண்ணெண்ணை கைப்பற்றி

## மக்களுக்கு விநியோகித்தனர்

எழுதுமட்டுவாள், யாழ் சாவகச்சேரிப் பகுதியில் சில கடைகளில் இராணுவத்தினர் திடீர் பரிசோதனையிட்டதைத் தொடர்ந்து அத்தியாவசிய பொருட்கள் அங்கு பதுக்கிவைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பதுக்கல் பொருட்களை இராணுவத்தினர் கைப்பற்றி அவற்றைக் கட்டுப்பாட்டுவிலைக்குப் பொது மக்களுக்கு வழங்கினார்.

1500க்கு மேற்பட்ட கலன் மண்ணெண்ணையையும் 4 மூடை சீனியையும் மற்றும் ஏராளமான யானை மார்க் தீப்பெட்டிகளையும் இக்கடைகளில் இராணுவத்தினர் கைப்பற்றிப் பொதுமக்களுக்கு வழங்கினர். கலா ஒரு போத்தல் மண்ணெண்ணை ஒருறாத்தல் சீனி, ஒரு தீப்பெட்டி வீதம் பகிர்ந்து விற்பனை செய்யப்பட்டது கட்டுப்பாட்டு விலைக்கு வெங்காயமும் விற்கப்பட்டது.

0 0 0

உடுப்பிட்டி வியழான் நெல்லியடிப் பகுதியில் பல கடைகளில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த சீனிமூடைகள் இராணுவத்தினரால் வெளியில் கொண்டுவரப்பட்டுப் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

இப்பகுதி வாலிபர்களின் உதவியுடன் பதுக்கல் வேட்டையை நடாத்திய இராணுவத்தினர் கைப்பற்றப்பட்ட சீனி மூடைகளிலிருந்து அரை இறாத்தல் சீனி வீதம் விற்பனை செய்தனர்.

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 10-ம் திகதி
(23 4-71)

மேஷம்- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு.

ரிஷபம்- தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும், கண்துடைப்பு வேலை நடக்கும் கவனம் செலுத்தவும்

மிதுனம்- கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள் கல்வித்துறையில் வித்துவத் தன்மை தென்படும்

கடகம்- வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும், புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள்.

சிம்மம்- மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர் மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும் அமைதியே நன்று.

கன்னி- தனத்துடன் வாழ்வு இன்று தவழ்ந்து கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு.

துலாம்- உஷ்ணத்தின் தாக்குதல் உடலைப் பாதிக்கும். நயனரோகத்திற்கு இடமளியாது நடந்து கொள்ளவும்.

விருச்சிகம்- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள். பிதாவழித் தனமும் சேரும், தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும்

தனுசு- கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும்.

மகரம்- இன்று அதிக ஆதாயம் கிடைக்கும் புதுத் தொழில் துறைகளை மனம் நாடும் நீண்டபிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

கும்பம்- மனதில் விரக்தி நிலை தென்படும், உடல் நலமும் பாதிக்கப்படலாம் கால்நடைகளினால் நஷ்டம் ஏற்படும்.

மீனம்- சிந்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நன்கொடை

யாழ்ப்பாணம், வெள்ளி பயங்கரவாதிகளினால் தாக்குண்ட பொலிஸ் பாதுகாப்புப்படையினரின் குடும்ப நிவாரண நிதிக்கு யாழ். மாநகரசபை சார்பில் யாழ். நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா 500 ரூபாயை அமைச்சர் திரு. செ. குமாரசூரியரிடம் கையளித்தார்.

யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த கூட்டத்திலேயே மேயர் திரு. துரையப்பா இந்தப் பணத்துக்கான செக்கை கையளித்தார்.

## பொலிசாரிடம் துப்பாக்கிகளை ஒப்படையுங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி துப்பாக்கிகள் துப்பாக்கிரவைகள் வைத்திருப்பவர்கள் உடனடியாக 24 மணித்தியாலத்திற்குள் பொலிசாரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென பொலிசார் அறிவித்துள்ளனர்.

இவ்விதம் இவர்கள் செய்யாத பட்சத்தில் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்படுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

## உணவு, எண்ணை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்பதை அமைச்சர் கேட்டறிந்து தெரிந்து கொண்டார். மண்ணெண்ணை பெற்றோலுக்கு ஏற்பட்டுள்ள பெரும் தட்டுப்பாடு குறித்தும் அவர் மகாநாட்டில் தெரிந்துகொண்டு உடனடியாக அவை கிடைப்பதற்கான நடவடிக்கையைமேற்கொள்வதாக உறுதி தெரிவித்தார்.

இங்குள்ள பொருட்கள் அங்கு செல்ல வேண்டும். அங்குள்ள பொருட்கள் இங்கு வரவேண்டும். அப்போதுதான் நிலைமை சீராகும்.

அப்போதுதான் ஒவ்வொரு பகுதிகளிலும் கஷ்டமின்றிப் பொருட்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்க இதுதான் வழி. அரசாங்கமும் தன்னாலான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று அமைச்சர் திரு. குமாரசூரியர் கூறினார்.

**விற்பனையாளர் தேவை**

அளவெட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களில் "ஈழநாடு" பத்திரிகை விற்பனை செய்ய விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் உடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, "ஈழநாடு", யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org